தமிழ்நாடு தகவல் ஆணையம்
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590


**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA6824/F/2019**

**திரு இரா. அரவிந்த் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**நிதி ஆலோசர் மற்றும் நிறுவனச் செயலர் (பொ),**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்**
**பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,**
**எண்.1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு),**
**கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர்,**
**சென்னை - 600 008. ... பொது அதிகார அமைப்பு**

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **02.02.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **18.05.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **13.07.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு இரா. அரவிந்த், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ நிதி ஆலோசர் மற்றும் நிறுவனச் செயலர் (பொ), தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார

மேம்பாட்டு கழகம், எண் 1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு), கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 02.02.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தான் இடைநீக்கம் செய்யப்பட்ட காலகட்டத்தில் இரண்டு குழுக்கூட்டங்கள் நடைபெற்றது என்றும் இக்கழக இளநிலை உதவியாளராக இருக்கும் தனக்கு நிர்வாக ரீதியாக எடுக்கப்பட்ட குறிப்புகளை தெரிந்து கொள்வது என்பது தன் அடிப்படை உரிமை எனவும், அந்த இரு குழு கூட்டக் குறிப்புகள் அடங்கிய புத்தகத்தின் அசல் நகல் சான்றளித்து வழங்கக் கோரியும், தான் இடைநீக்கம் செய்யப்பட்ட காலக்கட்டத்தில் இக்கழக காலி பணியிடங்கள் எவையேனும் நேரடி பணிநியமனம், தற்காலிக பணி நியமனம், (ஒப்பந்த அடிப்படை (ம) தினக்கூலி அடிப்படையில்) மற்றும் அயற்பணியாளர்களை கொண்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதா? அவ்வாறு செய்யப்பட்டு இருந்தால் அவர்களின் பெயர், வயது, கல்வி தகுதி, பணியமர்த்தப்பட்ட இருக்கையின் விவரம் மற்றும் அவர்களின் பதவி ஆகிய விவரங்களை பட்டியலிட்டு வழங்கக் கோரியும் மற்றும் இந்த மனு தேதியிட்ட நாள்படி இக்கழகத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பணிநியமன இருக்கைகள் மொத்தம் எத்தனை உள்ளது? தற்பொழுது எவர் எந்த பதவியில் உள்ளனர்? எங்கு பணிபுரிந்து வருகின்றனர்? அயற்பணி செய்யும் உயர் அதிகாரிகளின் விவரம் ஆகியவற்றை பட்டியலிட்டு வழங்கவும், உயர்நீதிமன்ற ஆணைகள் இக்கழக உயர் அலுவலர்களை முறையாக செயலாக்கம் செய்து அமுல் படுத்தப்படுகிறதா? இக்கழகத்திற்கு கடந்த 4 ஆண்டுகளில் எத்தனை நீதிமன்ற உத்தரவுகள் இக்கழகத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது? எத்தனை உத்தரவுகள் செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதின் விவரங்களை பட்டியலிட்டு வழங்கக் கோரியும் 4 இனங்களின் பொதுத் தகவல் அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம், எண் 1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு), கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 25.02.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 18.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம், எண் 1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு), கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 17.06.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 13.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 02.02.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் 02.02.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA6824/F/2019</u>
பொதுத் தகவல் அலுவலர்/
நிதி ஆலோசர் மற்றும் நிறுவனச் செயலர் (பொ),
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
எண்.1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு),
கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர்,
சென்னை - 600 008.

<u>மனுதாரர்</u>
திரு இரா. அரவிந்த்,
எண் 1/1, சரோஜினி பாய் தெரு,
மதியழகன் நகர், சாலிகிராமம்,
சென்னை - 600 093.

Copy to: Judgement File/ Spare.
JE/ PA-11.11.2020